DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.15/2023**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கியம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | அருள் என்ற அருள்சாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பிரம்புவயலில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். 4 ஆண்டுகளுக்கு முன்பு கடந்த 21.08.2022 ம் தேதி காலை 8 மணியளவில் பிரம்புவயலில் உள்ள நாகநாதன் டீ கடையில் நான், அ.சா.1, கணேசன் ஆகியோர்கள் டீ சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது நெல்வியாபாரியான எதிரி நாகராஜ் வந்தார். அவரிடம் அ.சா.1 நெல்ஏற்றிவிட்டு பணத்தை கேட்டார். அதற்கு நாகராஜ் வர இடத்தில் எல்லாம் கேட்கிறியே என்று தப்பான வார்த்தை சொல்லி அ.சா.1 ஐ பேசினார். நாகராஜ் அ.சா.1 னிடம் பணம் தர முடியாது உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1ன் வீடும், நாகநாதன் டீ கடையும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1ன் வீடும், ஊராட்சி மன்ற தலைவர் பாலு என்வரின் தார்ஸ் வீடும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1ற்கும் எதிரிக்கும் இடையே எத்தனை வருடங்களாக பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று தெரியாது. விசாரித்த போலீஸ் எந்த பதவியில் உள்ளவர் என்று தெரியாது. என்னுடன் இருந்த கணேசன் உள்ளூர்காரரர் என்றால் சரிதான். எதிரி அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 உள்ளூர்காரரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எவ்வளவு நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.15/2023**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துக்கண்ணு |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கருப்பன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் பிரம்புவயலில் குடியிருந்து வருகிறேன். ஒரு 4 ஆண்டுகளுக்கு முன்பு நாகநாதன் டீ கடை அருகே தேவகோட்டை போலீசார் நெல் ஏற்றியது உண்மையா என்று விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 ம் கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 ம் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 02.09.2022 ம் தேதி மாலை 5 மணிக்கு நெல் ஏற்றிய பிரச்சனை சம்பந்தமாக விசாரணை செய்ய தேவகோட்டை தாலுகா போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். பிரச்சனை நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றால்

சரிதான். பின்னர் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்து அந்த இடத்தில் அ.சா.ஆ.4 கையொப்பத்தை என்னிடம் பெற்றார்கள் என்றால் சரிதான். போலீசார் அது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.